முருகப்பெருமான் துணை

**மகான் குருபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.09.2022**, புதன்கிழமை

1. தருமராசனே அரங்கமகா தேசிகா
   தவசியாக வாழும் ஞானதேசிகா
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   புண்ணியவழி காட்டும் குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது யாளி திங்கள்
   வரமென இருபான்நவ திகதி புந்திவாரம்
   **(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 29 நாள், 14.09.2022 புதன்கிழமை)**
   வழங்குவேன் குருபகவானும் அருளாசி தன்னை
3. தன்னிலே அரங்கன் திருவடி
   தருமமுடன் ஞானம் சேர்த்து
   மண்ணுலகில் மீட்கும் ஞானத்திருவடி
   மனமுவந்து சரணடைவு கொண்டு
4. கொண்டுமே சன்மார்க்க நெறி
   குறைவிலா தொடர்ந்து ஏற்று
   தொண்டுவழி மக்கள் இணைந்து
   தேசிகனார் நாமசெபம் போற்ற
5. போற்றவே சர்வபலம் கிட்டும்
   புகழ்தரும் பதவி சுகங்களும்
   ஆற்றல்பட ஆஸ்தி தனவளம்
   அனைத்தும் இலகுவாகி மாற்றம்
6. மாற்றம் தனாக நடக்கும்
   மகான் அரங்கன் தயவாலே
   ஏற்றம்பல வாழ்வில் கண்டு
   இன்னனவர்கள் வம்சா வம்சங்களும்
7. வம்சங்களும் கடவுளை தொடர்ந்து
   வல்லமைபட ஞானமாக வணங்கும்
   அம்சங்கள் கொண்டு திளைக்கநேரும்
   அழியாமை கண்டும் உயர நேரும்
8. நேருமை வாழும் தன்மையும்
   நீதி நெறி பிறழா வாழ்வும்
   வறுமை விரட்டும் சக்தியும்
   வசதிவளம் உருவாக்கும் சித்தியும்
9. சித்தியும் உலகோர் அரங்கன்
   சிறப்பான அருட்தயவால் அடைந்து
   உத்தமர்களாக ஞானவான்களாக
   உழைப்பாளிகளாக உலகை மாற்றும்

10. மாற்றும் ஞானயுகம் படைத்து
மறுமை மரணம் போன்ற இடரை
ஆற்றல்பட கடந்து வென்றுமே
ஆறுமுகப் பெருமான் தலைமை ஏற்று

11. ஏற்றுமே ஞானசித்தர் காலமாக
எல்லா குருமார்களும் வந்தருள
மாற்றமாக ஞான ஆட்சி படைப்பர்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–